vikatan.com
NAANAYAM VIKATAN VOLUME: 21 ISSUE: 13
₹35
22.2.26

# நாணயம் விகடன்

பணத்தைப் பெருக்கும் தாரக மந்திரம்

**வெள்ளி முதலீட்டில் இதுதான் நிலை... முதலீட்டாளர்கள் செய்யவேண்டியது என்ன தெரியுமா?**

**“அன்று 2 ரூபாய் தினக்கூலி, இன்று மாதம் ரூ.52,000 ஓய்வூதியம்...**
**என்னை உயர்த்திய பணத் திட்டம்!”**

## 25 வயதில் வேலை, 50 வயதில் ரிடையர்மென்ட்...

## 25 ஆண்டுக்கால இன்வெஸ்ட்மென்ட் பிளானிங்!





# குறைந்த விலை, கூடுதல் தள்ளுபடி... கார் வாங்க கரெக்ட்டான நேரம் எது தெரியுமா?

புதிய கார் வாங்குவது பெரும்பாலானோரின் வாழ்வில் மிக முக்கியமான முடிவுகளில் ஒன்று. ஆனால், சரியான நேரத்தில் கார் வாங்கினால், குறைந்த விலையிலும், கூடுதல் சலுகைகளுடனும் வாங்க முடியும். இந்தியாவில் கார் வாங்க சில காலகட்டங்கள் மிகவும் உகந்ததாகக் கருதப்படுகின்றன. அவை பற்றி விரிவாகப் பார்க்கலாம்.

### மிகவும் சிறந்த மாதம்!

முதலாவதாக, கார் வாங்க மிகவும் சிறந்த காலமாகக் கருதப்படுவது டிசம்பர் மாதம். வருட இறுதிக் காலத்தில் கார் நிறுவனங்களும் டீலர்களும் தங்களின் ஆண்டு விற்பனை இலக்குகளை அடைய முயற்சி செய்வார்கள். அதனால், ஷோரூம்களில் இருக்கும் பழைய ஸ்டாக் கார்களை விரைவில் விற்று முடிக்க அதிக தள்ளுபடிகளை வழங்கு வார்கள். இந்த காலத்தில் தள்ளுபடி தவிர, இலவச உதிரிபாகங்கள், குறைந்த வட்டி விகிதம் போன்ற பல்வேறு சலுகைகள் கிடைக்கும். குறிப்பாக, டிசம்பர் மாதத்தின் கடைசி இரண்டு வாரங்கள் கார் வாங்க மிகச் சிறந்த காலம்.

### பண்டிகைக் காலங்கள்!

அடுத்ததாக, இந்தியாவில் பண்டிகைக் காலங்கள் கார் வாங்க மிகவும் உகந்ததாகக் கருதப்படுகின்றன. குறிப்பாக, நவராத்திரி, தசரா, தீபாவளி, தந்தேரஸ் போன்ற பண்டிகை காலங்

**ஆனந்த் பார்த்தசாரதி,**
மேலாண் பங்குதாரர்,
www.arammfinserv.com



களில் மக்கள் அதிகமாக வாகனங்கள் வாங்குவது வழக்கம். இதைப் பயன்படுத்தி கார் நிறுவனங்கள் சிறப்புப் பண்டிகை சலுகைகளை அறிவிப்பார்கள். இந்த நேரத்தில் எக்ஸ்சேஞ்ச் போனஸ், குறைந்த வட்டி விகிதக் கடன் வசதி, இலவச இன்ஷூரன்ஸ், கூடுதல் உதிரிபாகங்கள் போன்ற பல நன்மைகள் கிடைக்கும்.

**நிதியாண்டு நிறைவு!**

கார் வாங்க சிறந்த காலகட்டமாக மார்ச் மாதமும் கருதப்படுகிறது. இந்தியாவில் நிதியாண்டு மார்ச் 31 அன்று முடிவடைவதால், டீலர்கள் தங்கள் ஆண்டு இலக்குகளை நிறைவேற்றக் கூடுதல் முயற்சி மேற்கொள்வார்கள். அதனால், நிதியாண்டு நிறைவில், அதாவது மார்ச் மாத இறுதியில் கார் விற்பனையை அதிகரிக்க சிறப்புத் தள்ளுபடிகள் மற்றும் சலுகைகள் வழங்கப்படுவது உண்டு.

குறிப்பாக, மார்ச் மாதத்தின் கடைசி வாரம் கார் வாங்க மிகவும் சாதகமான காலமாக இருக்கும். வருடத்தின் சில குறிப்பிட்ட மாதங்கள் மட்டுமல்லாமல், மாதத்தின் இறுதி நாள்களிலும் நல்ல சலுகைகள் பெற முடியும்.

**மாத இறுதி நாள்கள்!**

பெரும்பாலான கார் டீலர்களுக்கு மாதாந்தர விற்பனை இலக்குகள் இருக்கும். அதனால், மாத இறுதி நாள்களில் வாடிக்கையாளர்களை ஈர்க்கக் கூடுதல் தள்ளுபடிகள் வழங்க வாய்ப்பு அதிகம். அதேபோல், காலாண்டு முடிவுகள் வரக்கூடிய மார்ச், ஜூன், செப்டம்பர் மற்றும் டிசம்பர் மாத இறுதிகளிலும் சிறந்த சலுகைகள் கிடைக்கலாம்.

**புதிய மாடல் கார்கள் அறிமுகம்!**

புதிய மாடல் கார்கள் அறிமுகமாகும் ஆவதற்கு முந்தைய காலமும் கார் வாங்க சிறந்த காலகட்டமாக இருக்கும். புதிய மாடல் வரவிருப்பதால், பழைய மாடல்களின் இருப்பைக் குறைக்க மற்றும் காலி செய்ய டீலர்கள் விலையைக் குறைத்து விற்பனை செய்வார்கள். இதனால், அதே காரை குறைந்த விலையில் பெற நல்ல வாய்ப்பு உருவாகும்.

**மழைக்காலம்!**

ஜூன் முதல் ஆகஸ்ட் வரையிலான மழைக்காலத்தில் கார் ஷோரூம்களில் வாடிக்கையாளர் வருகை குறைவாக இருக்கும். இந்த காலத்தில் விற்பனையை அதிகரிக்க டீலர்கள் விலையைப் பேசி குறைக்க அதிக வாய்ப்புத் தருவார்கள். எனவே, அவசரம் இல்லாமல் கார் வாங்க திட்டமிடுபவர்களுக்கு இந்தக் காலமும் சாதகமாக அமையலாம்.

**சில உத்திகள்!**

கார் வாங்கும்போது சில முக்கிய உத்திகளைப் பின்பற்றினால் கூடுதல் சேமிப்புக் கிடைக்கும். ஒரே காருக்காக பல டீலர்களிடம் விலை விவரம் கேட்டு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். காரின் அடிப்படை விலை, இன்ஷூரன்ஸ், உதிரிபாகங்கள் ஆகியவற்றைத் தனித்தனியாக பேசி குறைக்க முயற்சிக்க வேண்டும்.

வங்கியில் முன்கூட்டியே பேசி கடன் வட்டி விகித விவரங்களை அறிந்து வைத்திருப்பது நல்லது. நிறம் அல்லது வேரியண்டில் சிறிது நெகிழ்வுடன் இருந்தால் கூடுதல் தள்ளுபடி பெற வாய்ப்பு அதிகம். பழைய காரை எக்ஸ்சேஞ்ச் செய்யும் திட்டங்களையும் சரியாக பயன்படுத்திக்கொள்ளலாம்.

மொத்தத்தில், அதிகபட்ச தள்ளுபடியுடன் கார் வாங்க விரும்புவோருக்கு டிசம்பர் மாதம் சிறந்த தேர்வு. நல்ல சலுகைகளுடன் உடனடியாக கார் வாங்க விரும்பினால் பண்டிகைக் காலம் பொருத்தமானது. வணிகப் பயன்பாட்டுக்காக அல்லது வரிச் சலுகை நோக்கத்தில் வாங்குபவர்களுக்கு மார்ச் மாத இறுதிக் காலம் பயனுள்ளதாக இருக்கும்.

கார் வாங்கும் முன் சரியான திட்டமிடலுடன் சரியான காலத்தைத் தேர்வு செய்தால், உங்களுக்கு பிடித்த காரை சலுகை விலையில் வாங்க முடியும். ●



a1e652e1-34f2-489a-bb87-27c3e1f88f6f